# யூன் – 16 – பொதுக்கால 11ம் ஞாயிறு

## மூவொரு கடவுள் (பரம திரித்துவம்) பெருவிழா

## “நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய் கடவுளின் அன்பு நம்மில் பொழியப்பட்டுள்ளது”

-----------------------------------------------------------------

### முதல் வாசகம் : நீதி மொழிகள் 8 : 22 – 31

ஆண்டவர் தம் படைப்பின் தொடக்கத்திலேயே தொல்பழங் காலத்தில் எதையும் படைக்கும் முன்னரே, என்னைப்படைத்தார். தொடக்கத்தில், பூவுலகு உண்டாகுமுன்னே, நானே முதன்முதல் நிலைநிறுத்தப்பெற்றேன்.கடல்களே இல்லாத காலத்தில் நான் பிறந்தேன் பொங்கி வழியும் ஊற்றுகளும் அப்போது இல்லை. மலைகள் நிலைநாட்டப்படுமுன்னே, குன்றுகள் உண்டாகுமுன்னே நான் பிறந்தேன்.அவர் பூவுலகையும் பரந்த வெளியையும் உண்டாக்குமுன்னே, உலகின் முதல்மண்துகளை உண்டாக்கு முன்னே நான் பிறந்தேன்.வானத்தை அவர் நிலைநிறுத்தினபோது, கடல்மீது அடிவானத்தின் எல்லையைக் குறித்தபோது, நான் அங்கே இருந்தேன்.உலகத்தில் மேகங்களை அவர் அமைத்தபோது, ஆழ்கடலில் ஊற்றுகளை அவர் தோற்றுவித்தபோது, நான் அங்கே இருந்தேன்.அவர் கடலுக்கு எல்லையை ஏற்படுத்தி அந்த எல்லையைக் கடல் நீர் கடவாதிருக்கும்படி செய்தபோது, பூவுலகிற்கு அவர் அடித்தளமிட்டபோது,நான் அவர் அருகில் அவருடைய சிற்பி இருந்தேன் நாள்தோறும் அவருக்கு மகிழ்ச்சியூட்டினேன் எப்போதும் அவர் முன்னிலையில் மகிழ்ந்து செயலாற்றினேன்.அவரது பூவுலகில் எங்கும் மகிழ்ந்து செயலாற்றினேன் மனித இனத்தோடு இருப்பதில் மகிழ்ச்சி கண்டேன்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது பெயர் உலகெங்கும்
மேன்மையாய் உள்ளது

### இரண்டாம் வாசகம் : உரோமையர் 5 : 1 - 5

சகோதரர், சகோதரிகளே நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் மூலம் கடவுளுக்கு ஏற்புடையவர்களாகியுள்ள நாம், நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வழியாய்க் கடவுளோடு நல்லுறவு கொண்டுள்ளோம்.நாம் இப்போது அருள்நிலையைப் பெற்றிருக்கிறோம். இந்நிலையை அடையும் உரிமை இயேசு கிறிஸ்துமீது கொண்ட நம்பிக்கையால் தான் அவர் வழியாகவே நமக்குக் கிடைத்தது. கடவுளின் மாட்சியில் பங்குபெறுவோம் என்னும் எதிர்நோக்கில் நாம் பெருமகிழ்வும் கொள்ள முடிகிறது.அதுமட்டும் அல்ல, துன்பங்களைத் தாங்கிக் கொள்வதிலும் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். ஏனெனில், துன்பத்தால் மன உறுதியும்,மன உறுதியால் தகைமையும், தகைமையால் எதிர்நோக்கும் விளையும் என அறிந்திருக்கிறோம்.அந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது. எனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது.

### நற்செய்தி : யோவான் 16 : 12 – 15

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : ”நான் உங்களிடம் சொல்ல வேண்டியவை இன்னும் பல உள்ளன. ஆனால் அவற்றை இப்போது உங்களால் தாங்க இயலாது.உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். அவர் தாமாக எதையும் பேசமாட்டார் தாம் கேட்பதையே பேசுவார் வரப்போகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னிடமிருந்து கேட்டு உங்களுக்கு அறிவிப்பார். இவ்வாறு அவர் என்னை மாட்சிப்படுத்துவார். தந்தையுடையவை யாவும் என்னுடையவையே. எனவேதான் ”அவர் என்னிடமிருந்து பெற்று உங்களுக்கு அறிவிப்பார்” என்றார்,

**தியானம்:** இன்று மூவொரு கடவுளின் பெருவிழாவைக் கொண்டாட திருச்சபை எங்களை அழைத்திருக்கின்றது. மூவொரு கடவுளின் வெளிப்பாடு கிறிஸ்தவ நம்பிக்கையின் மையம். தந்தை, மகன், தூயஆவி இவர்களிடையேயுள்ள நெருக்கத்தையும், ஒற்றுமையையும், உறவுப் பரிமாற்றத்தையும், பகிர்வையும், புரிதலையும் வெளிப்படுத்துகின்ற விழா மூவொரு கடவுள் விழா. தொடக்கத்திலே இறைவன் மூவொரு இறைவனாக இருக்கின்றார். அனைத்தையும் இறைவன் செய்தாலும், மூன்று ஆட்களின் வழியாக செய்கின்றார். படைப்பு தந்தைக்கும், மனுவுருவும் மீட்பும் மகனிற்கும், காத்தலும் புனிதப்படுத்தலும் தூய ஆவிக்குரிய செயல்களாகும். இன்றைய விழாவுக்கான இறைவார்த்தைப் பகுதிகளில் முதல் வாசகம் இறைத் தந்தையின் அரும்பெரும் செயல்களையும், மகனின் விடுதலைப் பணியை நற்செய்தி வாசகமும், தூய ஆவியின் இடைவிடாத செயல்களை இரண்டாம் வாசகமும் நமக்கு தெளிவுபடுத்துகிறது. குறிப்பாக இன்றைய இரண்டாம் வாசத்தில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாக கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது என்று கூறி, இறைவனின் அன்பு பேருற்று இதுவே, இது இறைவனின ஆவியை மனித இதயங்களுக்கு பாய்ச்சுகின்றது. இதனால் நாம் அவரால் இயக்கப்பட்ட கடவுளின் மக்களாகி உரிமைப்பேறு பெற்றுள்ளோம். ஆகவேதான் நாம் நமது குடும்ப வாழ்வில் அன்பை விதைப்பதும், நமது சமூக வாழ்க்கையில் ஒற்றுமை உணர்வை வளர்ப்பதும், பகிர்வு மனப்பாங்கை நம் உள்ளங்களில் தூண்டுவதும் மூவொரு கடவுளின் ஒன்றிப்பே.